தமிழ்நாடு அரசின் மாற்றுத் திறனாளிகளுக்கான 'அனைத்தும் சாத்தியம்' அருங்காட்சியகத்திற்கு

தேசிய மையத்தால் "உலகளாவிய வடிவமைப்பு" விருதுகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து வாழ்த்து!

சென்னை, அக். 13-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (12.10.2023) தலைமைச் செயலகத்தில், Mphasis மற்றும் மாற்றுத்திறனாளிகள் வேலை வாய்ப்பு மேம்பாட்டிற்கான தேசிய மையத்தால் (National Centre for Promotion of Employment for Disabled People) 28.09.2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற "உலகளாவிய வடிவமைப்பு" விருதுகள் 2023 நிகழ்ச்சியில், தமிழ் நாடு அரசின் "அனைத்தும் சாத்தியம்" அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்ட விருதினை மாற்றுத் திறனாளிகள் நலத்துறை முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ) சுன்சோங்கம் ஜடக் சிரு, காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் சென்னை, காமராஜர் சாலையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள "அனைத்தும் சாத்தியம்" என்ற மாற்றுத் திறனாளிகளுக்கான அருங்காட்சியகத்தை தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 6.6.2022 அன்று திறந்து வைத்தார்.

"அனைத்தும் சாத்தியம்" என்ற அருங்காட்சியகமானது மாற்றுத்திறனாளிகள் உபயோகப்படுத்தும் 200க்கும் மேற்பட்ட உதவி உபகரணங்கள் மற்றும் அவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட பொருட்கள் அங்கு வருகை புரிபவர்களுக்கு அவர்கள் தனிச் சையாக வாழ்வதற்கு ஏதுவாக காட்சிப் பொருட்களாக வைக்கப் பட்டுள்ளது. மேலும். இந்த அருங்காட்சியகத்தில் மாற்றுத்திறனாளிகள் அணுகக்கூடிய இல்லம், வேலை செய்யும் இடத்தில் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் அவர்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு ஒய்வு நேரங்களில் பயன்படுத்தும் பொருட்களும் காட்சிப்படுத் தப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க தமிழ் நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான "அனைத்தும் சாத்தியம்" அருங்காட்சியகத்திற்கு புதுதில்லியில் 28.9.2023 அன்று Mphasis மற்றும் மாற்றுத் திறனாளிகள் வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்கான தேசிய மையத்தால் "உலகளாவிய வடிவமைப்பு" விருதுகள் 2023 நிகழ்ச்சியில் வழங்கப்பட்ட விருதினை.

மாற்றுத்திறனாளிகள் நலஇயக்குநர் ஏ.கே.கமல் கிஷோர். மாற்றுத்திறனாளிகள் அருங்காட்சியகத்தின் ஒருங்கிணைப்பாளர் களுடன் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வின்போது. சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன். மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் ஏ.கே.கமல் கிஷோர். "அனைத்தும் சாத்தியம்" அருங்காட்சியகத் தலைவர் திருமதி புனாம் நடராஜன். மேலாளர் ஏ. பிரபாகரன். கூடுதல் மேலாளர் திருமதி ஷிவானி. பேச்சு பயிற்சியாளர் திருமதி காபா நாசியா ஓமர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலைஞர் நூற்றாண்டு விழா!

கலைஞரின் தொலைநோக்குத் திட்டங்களின் கண்காட்சி!

அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக். 13-

சென்னை மாநிலக் கல்லூரி அரங்கில் நேற்று 12.10.2023 மாலை கண்காட்சியைப் கலைஞர் பற்றிய தமிழறிஞர்களின் இலக்கிய ஆய்வரங்கத்தையும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமை தாங்கினார்.

விழாவில் கலைஞரின் புறநானூற்றுக் கவிதைகளைத் திராவிட இலக்கிய ஆய்வு மாணவர் இரு கதிரவன் இயயமும் மாநிலக் கல்லூரி மாணவி செல்வி. ச. பிரியாக்ஷினியும் வாசித்தனர்.

'எழுத்தாளர் கலைஞர்' என்ற காணொலி இரையிடப்பட்டது.

தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தின் தந்தை கலைஞர் அவர்களின் கண்ணொளி வழங்கும் திட்டம், மகளிர் முன்னேற்றம், கைரிக்சா ஒழிப்புத் திட்டம், கணினிப் பூங்கா போன்ற பல தொலை நோக்குத் திட்டங்களால் தமிழ்நாடு அடைந்த பயன்கள் பற்றிய அரிய நிழற்படங்கள் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

ஆய்வரங்கத்தில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு கலைஞர் பற்றிய நூல்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார். தொடர்ந்து சிறப்புரையாற்றிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தனது உரையில் குடிமை மாற்று வாரியம்,கை ரிக்சா ஒழிப்பு, அனைத்து முதலமைச்சர்களும் விடுதலை நாளில் கொடி ஏற்றும் உரிமை, பெண்களுக்குச் சொத்துரிமை, 33% ஒதுக்கீடு, கலைஞர் காப்பீட்டுத் திட்டம் உள்ளிட்டவை களைப் பட்டியலிட்டு கலைஞர் விட்ட இடத்திலிருந்து தொடர்கிறார்நம்முடைய முதலமைச்சர் என்று குறிப்பிட்டார். அவரின் மறு உருவாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ; இலவசப் பேருந்துப் பயணம் போன்ற பல திட்டங்களைச் செயல்படுத்தும் தலைவராகத் திகழ்கிறார் கொண்டிருக்கிறார் நம் முதலமைச்சர் என்று பேரூரும் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கலைஞர் இலக்கியம் குறித்த ஆய்வரங்கில் 'கலைஞரும் திரைப்படங்களும்' என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசு எம். ஜி. ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் தடு.சர் இராஜேஷ் அவர்களும் 'கலைஞர் சிறு கதைகள்' என்ற தலைப்பில் எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வன் அவர்களும் 'கலைஞரின் கவிதைகள்' என்ற தலைப்பில் கவிஞர் வெண்ணிலா அவர்களும், 'கலைஞரின் மொழி ஆளுமை' என்ற தலைப்பில் எழுத்தாளர் இமையம் அவர்களும், ' கலைஞரும் தமிழக வரலாறும்' என்ற தலைப்பில் இயக்குனர் ம.ராதன்குமார் அவர்களும் ஆய்வுரைகள் நிகழ்த்தினர். தொடக்கத்தில் மாநில இலக்கிய அணி செயலாளர் வரவேற்புரை ஆற்றினார். நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆலந்தூர் எஸ். பாரதி அவர்களும் டி.கே.எஸ் இளங்கோவன் அவர்களும் முன்னிலை வகித்தனர். பெருநகர சென்னை மாநகராட்சிப் பணிகள் குழுத் தலைவர் நே. சிற்றரசு அவர்கள் நன்றியுரையாற்றினார்.

'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!

இன்று - சென்னையில் நடைபெறுகிறது! கழக முன்னாள் துணைப் பொதுச் செயலாளர்

'வாலிபப் பெரியார்' ஏ.வி.பி.ஆசைத்தம்பி நூற்றாண்டு விழா!

திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமை! அமைச்சர் பி.கே.சேகர்பாபு வரவேற்புரை! தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை!

சென்னை, அக். 13-

"வாலிபப் பெரியார்" என கழகத் தவரால் அன்போடு அழைக்கப்பெற்றவரும், கழக முன்னாள் துணைப் பொதுச் செயலாளரும், கழகம் வளர்த்த மூத்த முன்னோடியுமான ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழா. சென்னையில் இன்றைய தினம் நடைபெறுகிறது.

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு. ஏ.வி.பி. ஆசைத் தம்பி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வு பற்றிய விபரம் வருமாறு:-

தீராவிட முன்னேற்றக் கழகமூத்த முன்னோடிகளில் ஒருவர். கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர். இயக்கத்தின் சிங்கம். கழகத்தின் கருவூலம். நந்தை பெரியாரின் மாணவர். தன்மானப் பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புத்தம்பி. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற தோழர். கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில். சட்டப் பேரவை உறுப்பினராகவும்: பின்னர் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு கழகக் கொள்கையினை பாராளுமன்றத்தில் ஓங்கி ஒலித்தவர். பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதிபலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலே வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட "வாலிப் பெரியார்" என்று கழக நிர்வாகிகள், தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர். ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள்!

நெருக்கடிநிலை காலக்கட்டத்தில் 'மிசா கைதியாக' ஓராண்டு சென்னை மத்திய சிறையில் இருந்த பெரும் தியாக வரலாற்றுக்கும் உரியவர், ஆசைத்தம்பி அவர்கள்.

அப்பெருமகனாரின் நூற்றாண்டு விழா. தி.மு.க. தலைமைக் கழகம் சார்பில். சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.வின் நீகழ்ச்சி ஏற்பாட்டில். இன்றைய தினம் (13.10.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 5.30 மணியளவில். சென்னை - பாரிமுனை இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெறுகிறது.

இம்மகத்தான நிகழ்வுக்கு எழிலான ஏற்பாடுகளைச் செய்துள்ள. சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு. விழாவில் வரவேற்புரையாற்றுகிறார்.

கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி.. விழாவிற்கு முன்னிலை வகிக்கிறார். கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள். விழாவிற்குத் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்வில் - கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு. 'வாலிப் பெரியார்' ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றுகிறார். துறைமுகம் மேற்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் - ஏ.வி.பி.ஆசைத் தம்பி அவர்களின் புதல்வர் சௌந்தி ரபாண்டியன் உள்ளிட்ட குடும்பத்தினரும். கழக முன்னோடிகளும். நிர்வாகிகளும். தோழர்களும் கலந்து கொள்கிறார்கள்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. - இந்நிகழ்வுக்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

நகராட்சி நிகுவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (12.10.2023) சென்னை குடிநீர் வாரிய கீழ்ப்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையவளாகம் அகூலில், மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு தொடர்பான வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயர் திரு.மு.கா.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிகுவாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், நிலைக்குழு தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, 101-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.மு.தி.விட்டல்நா கோவிந்தராஜ், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செயல் இயக்குநர் செ.சரவணன், பொறியியல் இயக்குநர் எம்.ஜெய்கர் ஜேகதாஸ், தலைமைப் பொறியாளர் இரா. சிவமுருகன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மயிலாப்பூரில் அக்.15 முதல் 24 வரை நடைபெறுகிறது!

திருக்கோயில்கள் சார்பில் நவராத்திரி பெருவிழா!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை,அக்.13-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருக்கோயில்கள் சார்பில் சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருமண மண்டபத்தில் நவராத்திரி பெருவிழா 15.10.2023 முதல் 24.10.2023 வரை 10 நாட்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்படஉள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களை தொல்லை மாறாமல் புனரமைத்து குடமுழுக்குகளை நடத்துதல், திருத்தேர், திருக்குளங்கள் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து திருக்கோயில் சொத்துக்களை மீட்டெடுத்தல், வருகாய் இனங்களை பெருக்குதல் போன்ற பல வேறு பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது. இருக்கோயில்கள் சார்பில் கமலமுரளி சித்தர், பாம்பாட்டி சித்தர், கந்தரானந்த சித்தர் ஆதிய சித்தர் பெருமக்களுக்கும், திருஆருட்பிரகாச வள்ளலார், தெய்வப் புலவர் சேக்கிழார், சமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் (அப்பர் பெருமான்), நாலாயிர திவ்ய பிரபந்த மகாமுனிவர்களைத் தொடருடமுழுக்குகளை நடத்துதல், திருத்தேர், திருக்குளங்கள் மற்றும் நந்தவனங்களை ரீசைவத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து திருக்கோயில் சொத்துக்களை மீட்டெடுத்தல், வருகாய் இனங்களை பெருக்குதல் போன்ற பல வேறு பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது. இருக்கோயில்கள் சார்பில் கமலமுரளி சித்தர், பாம்பாட்டி சித்தர், கந்தரானந்த சித்தர் ஆதிய சித்தர் பெருமக்களுக்கும், திருஆருட்பிரகாச வள்ளலார், தெய்வப் புலவர் சேக்கிழார், சமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் (அப்பர் பெருமான்), நாலாயிர திவ்ய பிரபந்த மகாமுனிவர்களைத் தொடர் திருஆடாக கொண்டாடப்படும் நவராத்திரி பெருவிழா இந்நாண்டு இருக்கோயில்கள் சார்பில் சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருமண மண்டபத்தில் கொலுவுடன் 15.10.2023 முதல் 24.10.2023 வரை 10 நாட்கள் கொண்டாடப்பட உள்ளது. ஒவ்வொரு நாள் நிகழ்வின்போதும், மாலை சிறப்பு வழிபாடும், இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும். நவராத்திரி விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியாக 15.10.2023 அன்று மாலை 6 மணிக்கு மாணவ, மாணவியர் பங்குபெறும் சங்கீதவால்லி மாலை துளுவுடன் தொடங்கி, இரவு 7 மணிக்கு மாம்பலம் சங்கீதரிகள் திருமதி.ஆர்.விஜய லட்சுமி மற்றும் திருமதி ஆர். சிந்தா ஆகியோரின் இசை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

இருக்கோயில்கள் சார்பில் கொண்டாடப்படும் நவராத்திரி பெருவிழாவின் நிகழ்ச்சிகளில் சமய சான்றோர்கள், ஆன்மிகவாதிகள் மற்றும் இறையன்பர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பதோடு ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறஉள்ள தாக அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.